பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

16 07 2026 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. செமிகண்டக்டர் உற்பத்தியில் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதன் மூலம் அத்துறையில் உலகளாவிய மையமாக இந்தியா திகழும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. யூரியா முதலீட்டுக்கான தேசிய கொள்கை, புதிய முதலீடுகளை ஈர்க்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. இந்தியா - போலந்து இடையே சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த இருதரப்பு பேச்சுகள் புதுதில்லியில் நடைபெற்றது.

4. உலகப் புகழ்பெற்ற பூரி ஜெகன்நாத் ரத யாத்திரை ஒடிசாவில் இன்று தொடங்குகிறது.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் அர்ஜென்டினா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

Semicon இரண்டாம்கட்ட திட்டத்தை ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதன் மூலம் அத்துறையில் உலகளாவிய மையமாக இந்தியா திகழும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், செமிகான் இரண்டாம் கட்ட திட்டம், முதலீடுகளை அதிகளவில் ஈர்க்கும் என்றும், இளைஞர்களுக்கு உயர்தர வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் முக்கிய துறைகளில் தொழில்நுட்ப தற்சார்பை மேம்படுத்தும் என்றும் கூறியுள்ளார்.

இதேபோல் மொபைல் ஃபோனுக்கான உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதன் மூலம் இது “இந்தியாவில் உற்பத்தி செய்வோம்” மற்றும் நமது மின்னணுப் பொருட்கள் உற்பத்தி சூழலுக்கு பெரிய ஊக்கமளிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

62 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டம் உற்பத்தியை அதிகரிக்கும் என்றும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

யூரியா முதலீட்டுக்கான தேசிய கொள்கை, புதிய முதலீடுகளை ஈர்த்து, நாட்டின் உர பாதுகாப்பை வலுப்படுத்தும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், யூரியா உற்பத்தியில் சுயசார்பை அடைவதற்கு இது வலுசேர்க்கும் என்று தெரிவித்துள்ளார்.

நாட்டில் எரிவாயு அடிப்படையிலான யூரியா உற்பத்தி ஆலைகளில் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கூறியுள்ளார்.

இதனால் ஒவ்வொரு யூரியா உற்பத்தி ஆலைக்கும் 250 கோடி ரூபாய்க்கும் மேல் சேமிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இந்தியா - போலந்து இடையே சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த இருதரப்பு பேச்சுகள் நடைபெற்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான கூட்டத்தில் போலந்து சார்பில் அந்நாட்டு பொருளாதார மேம்பாட்டுத் துணை அமைச்சர் திரு. Michal Baranowski தலைமையிலான உயர்நிலைக் குழு பங்கேற்றது.

இந்திய தரப்பில் சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை செயலாளர் திரு. Bharath Khera தலைமையிலான குழு இடம்பெற்றது.

அப்போது பேசிய திரு. பரத் கேரா, இந்தியாவில் 86 மில்லியன் சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 30 சதவீத பங்களிப்பை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்துறை 3 கோடியே 30 லட்சம் பேருக்கு வாழ்வாதாரம் அளிப்பதாக அவர் கூறினார்.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறைக்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் முன்முயற்சிகள் குறித்து எடுத்துரைத்தார்.

அண்மையில் அமலுக்கு வந்துள்ள இந்தியா-ஐரோப்பிய யூனியன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்தியா - போலந்து இடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கு மேலும் ஊக்கமளிக்கும் என்ற திரு. பரத் காரே கூறினார்.

<<<<>>>>

நாட்டின் மின்னணுப் பொருட்கள் உற்பத்தி துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்துறையில் சுமார் 25 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதில் மொபைல் உற்பத்தி துறையில் மட்டும் 12 லட்சம் வேலைவாய்ப்புகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஓசூர், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் கர்நாடகாவின் பெங்களூருவில் உள்ள மொபைல் உற்பத்தி நிறுவனங்கள் மட்டும், ஒரு லட்சம் பேருக்கு மேல் வேலைவாய்ப்பை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

மின்னணுப் பொருட்கள் உற்பத்தியின் மதிப்பு கடந்த 11 ஆண்டுகளில் சுமார் 7 மடங்கு அதிகரித்துள்ளதாகவும், கடந்த நிதியாண்டில் 13 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

இக்காலகட்டத்தில் 4 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகப் புகழ்பெற்ற பூரி ஜெகன்நாத் ரத யாத்திரை இன்று தொடங்குகிறது.

ஒடிசா மாநிலம் பூரி நகரில் நடைபெறும் இந்த ரத யாத்திரையை காண உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து, லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை புரிவார்கள்.

இந்த ரத யாத்திரை வரும் 24ஆம் தேதி வரை 9 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ரத யாத்திரையை ஒட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், உலகப் புகழ் பெற்ற ஜெகன்நாத் ரத யாத்திரை, பெரும் நம்பிக்கை, உறுதி மற்றும் பக்தியின் சின்னமாக திகழ்கிறது என்று கூறியுள்ளார்.

நாட்டின் செழுமையான கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கும் இந்தப் புனித ரத யாத்திரை கடவுள் மீதான உறுதிமிக்க பக்தியை பிரதிபலிப்பதாக தெரிவித்துள்ளார்.

அனைவரது மகிழ்ச்சி, செழுமை மற்றும் நலனுக்காக தாம் பிரார்த்திப்பதாகவும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசத்தில் இருந்து முதலாவது சர்வதேச விமான சேவை தொடங்கியது.

இந்தூரில் இருந்து ஐக்கிய அரபு எமிரேட் தலைநகர் அபுதாபிக்கு நேரடி விமான சேவையை அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், சர்வதேச வழித்தடங்களில் விமானங்களை இயக்குவதற்காக ஒரு விமானத்திற்கு 15 லட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்க மத்தியப்பிரதேச அரசு தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

இதன் மூலம் பயணக் கட்டணம் குறையும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தூரில் இருந்து அபுதாபிக்கு வாரத்திற்கு 4 நாட்கள் விமானம் இயக்கப்படும் என்று கூறினார்.

முன்னதாக தில்லி அல்லது மும்பை வழியாக அபுதாபி செல்ல வேண்டி இருந்தபோது பயண நேரம் 7 முதல் 8 மணி நேரமாக இருந்தது என்று குறிப்பிட்ட மத்தியப்பிரதேச முதலமைச்சர், தற்போது இந்தூரில் இருந்து நேரடியாக விமானம் இயக்கப்படுவதன் மூலம் பயண நேரம் மூன்றேகால் மணி நேரமாக குறைந்துள்ளது என்று தெரிவித்தார்.

**<<<<>>>>**

மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மத்திய மக்கள் தொடர்பகம் சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் இந்த 3 நாள் விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் பயனாளிகள் முகாம் நேற்று தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் அர்ஜென்டினா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

Atlanta-வில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அந்த அணி 2-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

இறுதியாட்டத்தில் அர்ஜென்டினா அணி - ஸ்பெயின் அணியை எதிர்கொள்கிறது.

-------------

Budapest சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

ஆடவர் 57 கிலோ எடைப் பிரிவு இறுதியாட்டத்தில் இந்திய வீரர் Aman Sehrawat 13-3 என்ற புள்ளிக் கணக்கில் ஜார்ஜியாவின் Roberti-ஐ வென்றார்.

வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில் 61 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் தீபக் 9-8 என்ற புள்ளிக் கணக்கில் அஜர்பெய்ஜானின் நூர்தீனை வென்றார்.

65 கிலோ எடைப் பிரிவில் விஷால் 8-2 என்ற புள்ளிக் கணக்கில் கஜகஸ்தானின் Ossimzhan-ஐ வென்றார்.

<<<<>>>>